செ. கு. எண்: 117

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கற் செய்தி – 19.5.2013

மிகப் பழமை வாய்ந்த ஸ்ரீ அஹோபில மடத்தின் 45–வது ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் ஸ்வாமிகள் ஸ்ரீ லஷ்மிந்ருசிம்ம திவ்ய பாதுகா சேவகா ஸ்ரீவந் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மகா தேசிகன் அவர்கள் நேற்று **(18.5.2013)** இரவு திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் ஆசார்யன் திருவடி அடைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன்.

அஹோபில மடத்தின் 45–வது ஜீயராக 1992 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற ஸ்ரீவந் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மகா தேசிகன் அவர்கள் இந்தியா முழுவதும் பயணம் செய்து ஆன்மீகத்தை பரப்பி, சிஷ்யர்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஊட்டிய பெருமைக்குரியவர்.

திரு. ஸ்ரீவந் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மகா தேசிகன் அவர்களை இழந்து வாடும் அஹோபில மடத்தினருக்கும், சிஷ்ய கோடிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**